## 06-10-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

## தலைப்பு : தமிழிற் தரிப்புக் குறிகளின் பயன்பாடு

## தொடக்கவுரையாடல் : மு. மயூரன்

சி. சிவசேகரம் எழுதிய "தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு" என்கிற நூலை முன்வைத்து தமிழில் தரிப்புக்கிறிகளின் பயன்பாடு பற்றிய உரையாடலாக இக்கூட்டம் நடைபெற்றது.

* தரிப்புக்குறிகள் முதன் முதலில் கி. மு 3ம் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

* தமிழில் தரிப்புக்குறிகள் ஆங்கிலேயர்களின் கொலனி ஆட்சிக்காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டன.

* இடத்துக்கிடம், மொழிக்கு மொழி தரிப்புக்குறிகளின் பயன்பாடு மாறுபடுகிறது.

* உலகின் மற்ற மொழிகளைப்போலவே தமிழிலும் தரிப்புக்குறிகளின் பயன்பாட்டுக்கென இறுக்கமாக வரையறுக்கப்பட்ட இலக்கணங்கள் எதுவும் இல்லை.

* தமிழில் நடைமுறையிலுள்ள வழக்கங்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, தரிப்புக்குறிகளுக்கான வழக்கங்களையும் அனுசரித்து எழுதும்போது எழுத்தில் மயக்கங்கள் குழப்பங்கள் இராது.

* கேள்விக்குறியும் குறுந்தரிப்பும் [,] தமிழில் அடிக்கடித் தவறாகப் பயன்படுத்தப்படும் தரிப்புக்குறிகளாகும்.

* "வெல்லப்போவது அவனா இவனா?" என்ற வசனத்தில் இறுதியில் மட்டுமே கேள்விக்குறி வரும். "ஏன் எதற்கு எப்படி என்று கேட்காமலே ஏற்றுக்கொள்வர்" என்ற சொல்லில் முதல் மூன்று சொற்களுக்கும் கேள்விக்குறிகள் இடுவது மிகத்தவறானதாகும்.

* குறுந்தரிப்பானது பொருள் மயக்கம் ஏற்படும் இடங்களில் பயன்படுத்தப்படலாம். ஆனால் அளவுக்கதிகமாக அதனைப் பயன்படுத்துவது சலிப்பூட்டும். இரு வசனங்களுக்கிடையிலான தொடர்பை ஏற்படுத்தவும் குறுந்தரிப்புப் பயன்படுத்தப்பட முடியும்.

* உரைப்பகுதி ஒன்றினை உரத்து வாசித்துக்காட்டும்போது தரிப்புகுறிகளைச் சொல்லத்தேவையில்லை. தரிப்புக்குறிகள் வரும் இடங்களில் குரல் ஏற்றதாழ்வுகள் மூலமும் தரித்து நிற்கும் நேர இடைவெளியின் மூலமும் அத்தரிப்பினைக் காண்பிக்க வேண்டும்.

* தமிழ் இலக்கணத்தைக் குறுக்கீடு செய்யாத வகையில், வசனத்தை உடைவுகள் இன்றி வாசிக்கக்கூடிய வகையில் அடைப்புக்குறிகளைப் பயன்படுத்துவது அழகாகவும் பயனுடையதாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக, "பாலசிங்கம் (கனடா) அவர்களின் தாயார் நேற்றுக் காலமானார் " என்ற வாக்கியத்தில் வரும் அடைப்புக்குறி பொருள் மாறுபாட்டை ஏற்படுத்துவதுடன் வாக்கியத்தின் இயல்பான அமைப்பையும் முறித்து விடுகிறது. அதே வாக்கியத்தை, "(கனடாவில் வசிக்கும்) பாலசிங்கம் அவர்களின் தாயார் நேற்றுக் காலமானார்" என்று எழுதுவது சிறப்பானதாகும்.

* எடுத்துக்கொள்ளப்பட்ட நூலில் உள்ள தரிப்புக்குறிகளுக்கு மேலதிகமாக இன்று தமிழ்ச் சூழலில், இணையத்தில் புதிதாகப் பயன்படுத்தப்படும் குறியீடான இரட்டைச் சாய்வுக்கோடுகள் [//], நேரான கோடு [ | ] போன்றவை பற்றியும் உரையாடப்பட்டது.

இரட்டைச்சாய்வுக்கோடுகள், ஒருவர் எழுதிய உரைப்பகுதியையோ அல்லது நாம் மேற்கோள் காட்ட விரும்பும் உரைப்பகுதியையோ சிறப்புறுத்திக்காட்டப் பயன்படுத்தப்படுகிறது.

* இடப்பற்றாக்குறை போன்ற காரணங்களால் பந்தியாக எழுதவேண்டி நேரும்போது புதுக்கவிதைகளின் வரி முறிப்புக்களை காட்ட நேரான கோட்டினைப் பயன்படுத்துவது அழகாக இருக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

* புதுக்கவிதைகளின் வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி தேவையா என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, புதுக்கவிதைகளில் வசன முடிவு பந்தி முடிவாக பெரும்பாலும் அமைவதால் அது அவ்வளவு அவசியமில்லை என்றும், முற்றுப்புள்ளி வைப்பதானால் கவிதை முழுமைக்கும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பதிலளிக்கப்பட்டது.

* பல்வேறு தரிப்புக்குறிகளினதும் பயன்பாடு எடுத்துக்காட்டுக்கள் மூலமாக விரிவாக விளக்கப்பட்டது.



## 08/10

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் (ஏப்ரல் 13, 1930 - அக்டோபர் 8, 1959) ஒரு சிறந்த தமிழ் அறிஞர், சிந்தனையாளர், பாடலாசிரியர் ஆவார்.

திரைப் பாடல்களில் எளிமையான தமிழில் பொதுவுடைமைக் கருத்துக்களையும் சமூக சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியது இவருடைய சிறப்பாகும். இவருடைய பாடல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு மாநிலம் தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை அருகே உள்ள சங்கம் படைத்தான் காடு என்னும் சிற்றூரில் அருணாச்சலனார் - விசாலாட்சி ஆகியோருக்கு இளைய மகனாக 13.04.1930-ல் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தையும் கவி பாடும் திறன் பெற்றவர். கணபதி சுந்தரம் என்கிற சகோதரரும் வேதாம்பாள் என்கிற சகோதரியும் உள்ளனர். பள்ளிப்படிப்பு மட்டுமே கொள்ள முடிந்த கல்யாணசுந்தரம் திராவிட இயக்கத்திலும், கம்யூனிசத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய துணைவியார் பெயர் கௌரவாம்பாள். 1959-ஆம் ஆண்டு இவர்களுடைய குழந்தை குமரவேல் பிறந்தது. அதே ஆண்டில் (08.10.1959) இவர் அகால மரணம் அடைந்தார்.

இளம் பிராயத்திலேயே விவசாய சங்கத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். தான் பின்பற்றி வந்த கட்சியின் இலட்சியத்தை உயரத்தில் பறக்கும் வகையில் கலை வளர்ப்பதில் சலியாது ஈடுபட்டார்.நாடகக் கலையில் ஆர்வமும், விவசாய இயக்கத்தின் பால் அசைக்கமுடியாத பற்றும் கொண்டிருந்தார். தஞ்சையைச் சேர்ந்த வீரத் தியாகிகள் சிவராமன், இரணியன் ஆகியோருடன் சேர்ந்து விவசாய இயக்கத்தைக் கட்டி வளர்க்க தீவிரமாகப் பங்கெடுத்தார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**


**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

**வலைத்தளம் :**
circle.thulaa.net

செய்திமடல் - 21 | 13-10-2011




ஆங்கில மூலம் : http://ifyouhavetoaskyoudontknow.edublogs.org/2011/04/05/capitalism-and-extinction/

**சுயந்ரிணய உரிமை**

*13-10-2011* அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு
– இ. தம்பையா

Ø சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து சென்று தனி அரசமைப்பதா என்பது பற்றி ஆரம்பத்திலிருந்து விவாதிக்கப்பட்டு வந்தது.

Ø இன்று எந்தவொரு நாட்டின் அரசியல் யாப்பிலும் தேசிய இனங்களின் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்படவில்லை விதிவிலக்கு கனடாவில் கியூலக் பிராந்தியம்

Ø தேசிய இனங்களுக்கும்,தேசங்களுக்குமான சுயநிர்ணய உரிமையை தனியரசு அமைக்காத நிலையில் உறுதி செய்ய முடியுமா?

Ø சுயநிர்ணய உரிமையின் பிரயோகம் தனியரசிலும் ஐக்கியப்பட்ட நாட்டிலும் பிரயோகிக்க முடியுமா?

Ø இன்று ஏகாதிபத்தியத்தின் தலையீடு/உதவியின்றி தேசிய இனமொன்று தனியரசை அமைக்க முடியுமா?

Ø நிலத் தொடர்சியற்று வாழும் தேசிய இனங்கள் எவ்வாறு தனிநாடமைக்க முடியும்? அவ்வாறு தனியரசமைக்க முடியாவிட்டால் அத்தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமை இல்லையா?

Ø தேசிய இனமொன்றுக்கு தனித் தேசிய அரசொன்றை அமைக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு.

//ஒரு உரிமையைக் கொண்டவர், அதை ஏன் எப்போது பிரயோகிக்க வேண்டும் என்பதை ஆராயாமல், ஒரு உரிமை இருப்பதால் அது பிரயோகிக்கப்பட்டே ஆகவேண்டும் என்று சிலர் ஏன் சொல்கிறார்கள்? அந்த உரிமை பிரயோகிக்கப்படாமை அந்த உரிமையின் இழப்பல்ல. பிரிந்து போகும் உரிமை கோரிப் போராடுவோர் பிரிவினைக்காகப் போராடுவோரினின்று தெளிவாகவே வேறுபடுகிறார்கள். முன்னையோர் இணைந்து வாழும் வாய்ப்பைக் கருத்திற் கொண்டு போராடுகிறார்கள்; பின்னையோர் எவரிடமும் பிரிந்துபோகும் உரிமையைக் கேட்காமற் பிரிவினைக்காகவே போராடுகிறார்கள்.// நன்றி : மீநி

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**